பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 05 2024 **MONDAY** 7 15 **AM**
வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள் வாசிப்பவர் - மிருதுளா

தலைப்புச் செய்திகள்

1. வங்கக்கடலில் உருவான **Remal** புயல் மேற்குவங்கம் - பங்களாதேஷ் இடையே கரையை கடந்தது.

2. மக்களவைக்கு கடைசிகட்ட வாக்குப்பதிவு நடைபெற ஐந்து நாட்களே உள்ள நிலையில் 57 தொகுதிகளில் பிரச்சாரம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

3. அக்னிபாத் திட்டம் குறித்து, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, தவறான பிரச்சாரம் செய்வதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

4. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு ஓராண்டுக்குள் வேலை உறுதி செய்யப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணிக்கு மேற்குவங்க மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

>>>><<<<

வங்கக்கடலில் உருவான **Remal** புயல் மேற்குவங்க மாநிலம், சாகர் தீவு - பங்களாதேஷின் கேபுபாரா இடையே கரையை கடந்தது.

இந்தப் புயல் வடக்கு – வடகிழக்கு திசையில் நகர்ந்து, படிப்படியாக வலுவிழக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையை கடந்த போது, மணிக்கு 110 முதல் 120 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசியதால், கரையோர மாவட்டங்களில் ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.

அந்த மரங்களை அகற்றும் பணியில் மாநில பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

புயல் கரையை கடந்ததை அடுத்து, மேற்குவங்க மாநிலத்தின் தெற்கு பகுதியில் உள்ள வடக்கு 24 பர்கானா உட்பட பெரும்பாலான மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், **Remal** புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள மேற்குவங்க மாநிலத்திற்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

மக்களவைக்கு இறுதிகட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதிகளிலும், பீகாரில் 8, ஒடிசாவில் 6, மேற்குவங்கத்தில் 9, ஹிமாச்சலப்பிரதேசத்தில் 4, ஜார்க்கண்டில் 3 மற்றும் சண்டிகரில் ஒரு தொகுதி என 57 தொகுதிகளில் வரும் சனிக்கிழமை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள், பேரணிகள், பொதுக்கூட்டங்களில் பங்கேற்றும், மக்களை சந்தித்தும் ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

உத்தரபிரதேசம், ஜார்கண்ட், பஞ்சாப் மாநிலங்களில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், தலைவர்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, ஹிமாச்சலப்பிரதேசத்திலும், உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத், **Sadat** மற்றும் **Mau** மாவட்டங்களிலும் இன்று பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர் ஒடிசா மாநிலம், பாலசோரில் இன்று தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றுகின்றனர்.

>>>><<<<

அக்னிபாத் திட்டம் குறித்து, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, தவறான பிரச்சாரம் செய்வதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

ஹிமாச்சலப்பிரதேசம், காங்ராவில் நேற்று தேர்தல் பிரச்சரத்திற்கிடையே, செய்தியாளர்களிடம் பேசிய அவர் இத்திட்டத்தால், இளைஞர்களின் வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்படும் என்று கூறுவது தவறானது என்று கூறினார்.

100 பேர் அக்னிவீரராக மாறினால், அவர்களில் 25 சதவீதத்தினர் ராணுவத்தில் நிரந்தரமாக பணியமர்த்தப்படுவார்கள் என்றும், மீதமுள்ள 75 சதவீதம் பேருக்கு பிஜேபி ஆளும் மாநிலங்களில் காவல்துறையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வீரர்களுக்கு மத்திய அரசின் துணை ராணுவப்படையிலும் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்றும், இடஒதுக்கீடு தவிர, அரசு பணிக்கு இவர்கள் விண்ணப்பிக்கும் போது, வயது, தேர்வு போன்றவற்றில் தளர்வுகள் அளிக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

முன்னதாக, தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், நக்ஸல் தீவிரவாதத்திற்கு இன்னும் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளில் தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொரும்பாலான பகுதிகளில் நக்ஸல் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை மத்திய அரசு ஒழித்துவிட்டதாக கூறினார்.

ஜார்க்கண்ட் மாநிலம், நக்ஸல் தீவிரவாதிகளிடமிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒடிசா, தெலங்கானா, ஆந்திரா, மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் நக்ஸல் தீவிரவாதம் ஒடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

சத்திஷ்கர் மாநிலத்தின் சில பகுதிகளில் மட்டும் நக்ஸ்ல் தீவிரவாதிகளின் நடமாட்டம் உள்ளதாகவும், அங்கு கடந்த டிசம்பர் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், புதிதாக பொறுப்பேற்றுள்ள பிஜேபி அரசு

அம்மாநிலத்தை நக்ஸல் தீவிரவாதிகளிடமிருந்து விடுவிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>><<<<

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு ஓராண்டுக்குள் வேலை உறுதி செய்யப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த 10 ஆண்டுகளில் தொழிலதிபர்கள் 22 பேரின் 16 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கடனை தள்ளுபடி செய்த மத்திய அரசு ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்திற்கு பருவமழையால் ஏற்பட்ட பேரழிவை சமாளிக்க 9 ஆயிரம் கோடி ரூபாயை இதுவரை வழங்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

>>>><<<<

தெலங்கானா மாநிலத்தில் சட்ட மேலவை இடைத்தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

வாராங்கல், கம்மம், நல்கொண்டா பட்டதாரி தொகுதிகளுக்கு இன்று காலை எட்டு மணி முதல் மாலை 4 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 5ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்

>>>><<<<

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாடு இன்று உதகமண்டலத்தில் உள்ள ராஜ்பவனில் தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை ஆளுநர் திரு. ஆர். என். ரவி தொடங்கி வைத்து, உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டில் அண்ணா பல்கலைக் கழகம், சேலம் பெரியார் பல்கலைக் கழகம் உட்பட மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் பங்கேற்கிறார்கள்.

ஆளுநரின் வருகையை முன்னிட்டு, உதகமண்டலத்தில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

>>>><<<<

சென்னை, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் கடந்த 15 மாதங்களில், 11 பேருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் கடந்த ஆண்டு, பிப்ரவரி மாதம் முதலாவது கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்ததை அடுத்து, தொடர்ந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனியார் மருத்துவமனைகளில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்ள 35 லட்சம் ரூபாய் செலவாகும் என்ற நிலையில், சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ், கட்டணமின்றி அறுவை சிகிச்சை செய்யப்படுவதாக கல்லீரல் மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பிரேம்குமார் தெரிவித்துள்ளார்.

இதேபோல் இந்த மருத்துவமனையில் இந்த ஆண்டு 26 பேருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயில் சற்று தணிந்து, இதமான சூழல் நிலவுவதால், சுற்றுலா தலங்களில் பொதுமக்களின் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது.

மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கடந்த ஒருவார காலமாக பெய்து வந்த மழையால், தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் ஐந்தருவி, பேரருவி, பழைய குற்றால அருவி, புலி அருவிகளில் மக்கள் நீராடி மகிழ்ந்து வருகின்றனர்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்று வரும் கோடை விழாவை முன்னிட்டு, நேற்று கொழு கொழு குழந்தைப் போட்டி நடைபெற்றது. இதில் 50-க்கு மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டன.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்துறை சார்பில் நடத்தப்பட்ட இந்த போட்டியில் குழந்தைகளின் எடை, உயரம், ஆரோக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்தனர்.

வாரத்தின் கடைசி நாள் என்பதால் நேற்று, சென்னை வண்டலூரில் உள்ள அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டியில் உள்ள சிறுவர் பூங்கா, கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள சுற்றுலா தலங்களிலும் பொதுமக்களின் வருகை அதிகரித்து காணப்பட்டது.

>>>><<<<

இந்திய ஹஜ் யாத்ரீகர்கள் இவ்வாண்டு ஜெட்டாவில் இருந்து, மெக்கா செல்வதற்கு ஹராமைன் அதிவிரைவு ரயில் வசதியை சவுதி அரேபிய ரயில்வே முதல் முறையாக வழங்கியுள்ளது.

இந்தியாவிலிருந்து ஜெட்டா சென்ற யாத்ரீகர்கள் 300 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய இந்த அதிவிரைவு ரயிலில் அழைத்து செல்லப்பட்டனர்.

அங்குள்ள இந்திய துணை தூரகமும், சவுதி அரேபிய அரசுடன் கலந்துபேசி இந்த வசதியை பெற்றுள்ளது.

>>>><<<<

77-ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவில், இந்தியா இதுவரை மூன்று முக்கிய விருதுகளை பெற்று சாதனை படைத்துள்ளது.

பிரான்சில் நடைபெற்றுவரும் இந்த விழாவில், **All We Imagine as Light** என்ற இரு செவிலியர்களின் வாழ்க்கையை சித்திரிக்கும் பாயல் கபாடியாவின் திரைப்படம் கிராண்ட் பிரிக்ஸ் விருது பெற்றுள்ளது.

இந்திய திரைப்படக்கல்லூரி மாணவர் சித்தானந்தா நாயக் இயக்கிய 15 நிமிட கன்னட குறும்படம் **‘La Cinef ’** பிரிவு விருது பெற்றுள்ளது.

>>>><<<<

பாலஸ்தீனத்தின் **Rafah** நகரத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்தனர்.

தொடர்ந்து அந்நகரில் இஸ்ரேல் ராணுவத்தினருக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே மோதல் தீவிரமாக நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>><<<<

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி செல்சியஸ் முதல் 39 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸ் முதல் 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>><<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்று, பத்தாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் கோப்பையை கைப்பற்றியுள்ளது.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி 18 புள்ளி 3 ஓவரில் 113 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**Andre Russel** 3 விக்கெட்டுகளையும், மிச்செல் ஸ்டார்க், **Harshit Rana** ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், வைபவ் அரோரா, சுனில் நரேன், வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

114 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கொல்கத்தா அணி, 10 புள்ளி 3 ஓவரில் இரண்டு விக்கெட் இழப்புக்கு, இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணி வெற்றிபெறுவது இது மூன்றாவது முறையாகும்.

இந்நிலையில், கோப்பையை வென்ற கொல்கத்தா அணிக்கு மேற்குவங்க மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா அணியின் வெற்றி மேற்குவங்க மாநிலம் முழுவதும் கொண்டாட்டத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவர் திரு. ஜெய் ஷா உட்பட பலரும் கொல்கத்தா அணிக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

>>>>END<<<<